# லுணுகல பிரதேச சபை
# பதுளை மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 யூன் 13 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 திசெம்பர் 17 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 ஆகஸ்ட் 16 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள லுணுகல பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீளச் செலுத்த வேண்டிய வைப்புக் கணக்கில் செலவு வைக்கப்பட்ட முப்பத்து மூன்று வேலைகளுக்கான நிறுத்திவைத்தல் பணமான ரூபா 995,059 தொகை வேலைக் கடன்கொடுத்தோரின் கீழ் கணக்கு வைக்கப்பட்டமையினால் மீளச் செலுத்த வேண்டிய வைப்புக் கணக்கு மீதி அப் பெறுமானத்தினால் குறைவாகவும், கடன்கொடுத்தோர் கணக்கின் மீதி அப் பெறுமானத்தினால் அதிகரித்தும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) உள்ளகக் கிராமச் செயற்திட்டத்தின் நடைமுறைக் கணக்கில் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 8,298,803 தொகையான காசு மீதி சபை நிதியக் கணக்கின் மீதியாகக் கருதி கணக்கு

(அ) அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் I ஆம் வகுப்பில் பதவியிலுள்ள பதில் கடமையாற்றும் செயலாளருக்கு தாபன விதிக் கோவையின் VII ஆவது அத்தியாயத்தின் 12:5:2 ஆம் பிரிவிற்கு முரணாக பதிற் கடமையாற்றும் சம்பளக் கணிப்பீட்டால் ரூபா 44,587 தொகை மேலதிகமாகக் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) சபைக்குரிய சோலன்ட்ஸ் நீர்த் திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட 741 நீர் இணைப்புக்களுக்காக நீர் மாணிகள் பொருத்தப்படாமல் மாதாந்தம் ரூபா 50 முதல் ரூபா 2,000 வரை நிலையான கட்டணம் அறவிடப்பட்டிருந்தது.

(இ) 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதிசேர் வரி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் 215 சந்தர்ப்பங்களின் போது அறவிடப்பட்ட பெறுமதிசேர் வரியான ரூபா 40,074 தொகை 2013 யூன் 21 ஆந் திகதி வரையிலும் வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

## 2.5 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

சபையினால் முறையான கழிவுப் பொருள் முகாமைத்துவத் திட்டம் அமுல்படுத்தப்படாதிருந்ததுடன் சபை வளவில் முறையற்ற வகையில் துண்டுக் குப்பைகள் போடப்பட்டிருந்தது.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஈ) ஒப்பந்த நிருவாகம்